முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இ.ம. எண். 26/2018

நி.ம.எண்.27/2017

எ.ம.சா.1 – செந்தில்குமார்

24–04–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) மனுவிற்கும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்திற்கும் என்ன தொடர்பு என்றால் மனுச் சொத்துக்குரிய வில்லங்கச் சான்றிதழ். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்து கூறுங்கள் என்றால் டி.எஸ்.எல்.ஆர். ஆவணமாகும். எம.சா.ஆ.1 க்கும், என் அப்பாவின் சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் எ.ம.சா.ஆ.4 க்கும் மனுச் சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மனுச் சொத்துக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. குடிநீர் இணைப்பை நாங்களும் மனுதாரரும் பயன்படுத்தி வருகிறோம்.

2) மனுச் சொத்தை எதற்காக வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் வியாபாரத்திற்காக விடப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.4 வரிசை ரசீதுகளில் வீட்டு உபயோகம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுச் சொத்தின் ஒரு பகுதியில் மனுதாரர் வாடகைக்கு உள்ளார். எ.ம.சா.ஆ.4 சொத்து வரி ரசீதுக்கும் மனுச் சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மனுதாரை மிரட்ட வேண்டி வாடகைக்கட்டுப்பாட்டு மனு மற்றும் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

4) நிறைவேற்று மனுவிலும், வாடகைக்கட்டுப்பாட்டு மனுவிலோ மனுச் சொத்துக்கு என் தகப்பனார் உரிமையாளர் எனக் காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 14.12.2017 ம் தேதி என் தகப்பனார் நியமனம் செய்த வழக்கறிஞர் ரூ.80 ஆயிரம் வாடகையாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் இந்த மனுதாரர் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு ஒருதலைபட்ச உத்தரவு 27.11.2017 ம் தேதி ஏற்பட்ட பிறகு 14.12.2017 ம் தேதி என் வழக்கறிஞர் ரூ.80 ஆயிரம் வாடகை பெற்றுக் கொண்டுள்ளார் என்றார் ஞாபகமில்லை. மனுச் சொத்தை காலி செய்ய மனுதாரர் கால அவகாசம் கேட்டார். நீதிமன்றம் நிலுவை வாடகையை செலுத்தச் சொன்ன போது பகுதி வாடகையை மனுதாரர்

கொடுத்தார். நிறைவேற்று மனு மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டு மனு மனுதாரரை காலி செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டது. வாடகை வசூலிக்க தாக்கல் செய்யப்படவில்லைா என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.04.24 04:02:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.